# KINGS SCHOOL

## Student Declaration & Code of Conduct Commitment

*(For Students of Classes VI and Above)*

## மாணவர்களுக்கான பிரகடனம் & ஒழுக்க வழிமுறைகளுக்கான உறுதிமொழி

(ஆறாம் வகுப்பு மற்றும் அதற்கு மேற்பட்ட மாணவர்களுக்காக)

### Student Declaration

I understand that being a student of Kings School is both a privilege and a responsibility. I commit to upholding the values of respect, discipline, honesty and responsibility at all times—on the school campus, during school activities, in transport and in all situations where I represent Kings School.

**By signing this declaration, I knowingly and willingly agree to the following:**

### மாணவர் உறுதிமொழி

நான் கிங்ஸ் பள்ளியின் மாணவராக இருப்பதைப் பெருமையாகவும் அதே சமயம், மிகச்சிறந்த பொறுப்பாகவும் உணர்கிறேன்.

நான் பள்ளி வளாகம், பள்ளி நிகழ்வு, போக்குவரத்து போன்றவற்றில் கிங்ஸ் பள்ளியை முதன்மைப்படுத்தும் அனைத்துச் சூழ்நிலைகளிலும் மரியாதை, ஒழுக்கம், நேர்மை போன்றவற்றைக் கடைப்பிடிப்பேன்

**இந்த உறுதிமொழியில் கையெழுத்திடுவதன் மூலம், கீழ்க்கண்டவற்றை முழுமையாக அறிந்தும், புரிந்தும் விருப்பத்துடனும் ஏற்கிறேன்.**

### 1. Behaviour & Respect

**I will:**

- ❖ Treat teachers, staff, classmates, visitors and support staff with respect and courtesy at all times.
- ❖ Use polite language and behave responsibly in words and actions.
- ❖ Follow instructions given by school authorities promptly and sincerely.

**I will not:**

- ❖ Bully, tease, threaten, harass, discriminate or hurt anyone physically, verbally, emotionally or online.
- ❖ Engage in disrespectful, aggressive or disruptive behaviour.

### 1. நடத்தை மற்றும் மரியாதை

**இவற்றை நான் பின்பற்றுவேன் :**

- ❖ கிங்ஸ் பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்கள், அலுவலக ஊழியர்கள், நண்பர்கள், மற்றும் பிற பணியாளர்கள் போன்ற அனைவரையும் எப்பொழுதும் மரியாதையுடன் நடத்துவேன்.
- ❖ நான் பேசும் சொற்களிலும், செய்யும் செயல்களிலும் கனிவான மொழிகளைப் பயன்படுத்துவதோடு மரியாதையாகவும் நடந்து கொள்வேன்.
- ❖ பள்ளி நிர்வாகம் வழங்கும் அறிவுறுத்தல்களை உடனடியாகவும், முழுமையாகவும் செயல்படுத்துவேன்.

நான் இவற்றை செய்யமாட்டேன் :

- ❖ எவரையும் உடலளவிலும், மனதளவிலும் காயப்படுத்தமாட்டேன்.
- ❖ இணையத்தின் வழியாக இகழ்தல், மிரட்டுதல், துன்புறுத்தல், பாகுபாடு காட்டுதல் போன்ற சமூக விரோதச் செயல்களைச் செய்யமாட்டேன்.
- ❖ மரியாதை குறைவான, ஆவேசமான இடையூறு விளைவிக்கும் எந்தவொரு நடத்தைகளிலும் ஈடுபடமாட்டேன்.

## 2. Attendance, Punctuality & Appearance

**I will:**

- ❖ Attend school regularly and be punctual every day.
- ❖ Come to school in proper uniform, neatly dressed and well-groomed as per school rules.
- ❖ Be prepared for classes with required books, materials and completed work.

**I will not:**

- ❖ Leave the school campus during school hours without proper permission.
- ❖ Skip classes or school activities without proper permission.

## 2. வருகை, நேர்த்தி மற்றும் தோற்றம்

**நான் பின்பற்றுவேன் :**

- ❖ தினமும் சரியான நேரத்தில் தாமதமின்றி பள்ளிக்கு வருவேன்.
- ❖ பள்ளி விதிகளுக்கு உட்பட்ட சீருடையைத் தினமும் தூய்மையாக அணிந்து வருவேன்.
- ❖ அன்றன்று கொடுக்கப்படும் வீட்டுப்பணிகளை முடிப்பதோடு மட்டுமின்றி, பாடவேளைக்குத் தேவையான புத்தகங்கள் மற்றும் கல்விச்சார்ந்த உபகரணங்களையும் கொண்டு வருவேன்.

**இவற்றை நான் செய்யமாட்டேன் :**

- ❖ முறையான அனுமதி இன்றி பள்ளி நேரத்தில், வளாகத்தை விட்டு வெளியே செல்லமாட்டேன்.
- ❖ முன் அனுமதி இன்றி வகுப்புகள் மற்றும் பள்ளி நிகழ்வுகளைத் தவிர்க்கமாட்டேன்.

## 3. Academic Honesty

**I understand that honesty is non-negotiable.**

**I will:**

- ❖ Do my own work and submit original assignments and projects.
- ❖ Follow examination rules strictly and fairly.

**I will not:**

- ❖ Cheat, copy or use unfair means in exams or assessments.
- ❖ Misuse AI tools, digital platforms or copied content for academic work.

## 3. கல்வியில் நேர்மை

**நேர்மை என்பது சமரசமற்றது என்பதனை நான் புரிந்து கொள்கிறேன்.**

**இவற்றை நான் பின்பற்றுவேன் :**

- ❖ என் பணிகளை நானே செய்து, அதனையே சமர்ப்பிப்பேன்.
- ❖ தேர்வு விதிகளை முறையாகவும் நியாயமாகவும் பின்பற்றுவேன்.

**இவற்றை நான் செய்யமாட்டேன் :**

- ❖ தேர்வுகளிலும், ஆசிரியர் கொடுக்கும் பிற பணிகளிலும் ஏமாற்றவோ, பிற மாணவர்களைப் பார்த்து எழுதவோ, வேறு பிரதிகள் மூலம் பார்த்து எழுதவோ அல்லது தவறான முறைகளையோ பயன்படுத்தமாட்டேன்.
- ❖ கல்விப் பணிகளுக்காக AI கருவிகள், டிஜிட்டல் தளங்கள் அல்லது நகலெடுத்த உள்ளடக்கங்களைத் தவறாக பயன்படுத்தமாட்டேன்.

## 4. Care for School Property & Environment

**I will:**

- ❖ Take good care of school buildings, furniture, books, laboratories, playgrounds, buses and equipment.
- ❖ Keep my classroom, campus and surroundings clean and tidy.

**I will not:**

- ❖ Damage, deface, litter or misuse school property or facilities.
- ❖ Waste water, electricity or school resources.

## 4. பள்ளிச் சொத்துகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு

**இவற்றை நான் பின்பற்றுவேன் :**

- ❖ பள்ளிக் கட்டிடங்கள், பொருட்கள் , புத்தகங்கள், ஆய்வகங்கள், விளையாட்டு மைதானங்கள், பள்ளி வாகனங்கள் மற்றும் கல்விச்சார்ந்த உபகரணங்களைக் கவனமாகப் பாதுகாப்பேன்.
- ❖ வகுப்பறை மற்றும் பள்ளி வளாகத்தைச் சுத்தமாக வைத்திருப்பேன்.

**இவற்றை நான் செய்யமாட்டேன் :**

- ❖ பள்ளிச் சொத்துகளைச் சேதப்படுத்தும் வகையில் எந்தவொருச் செயல்களிலும் ஈடுபடமாட்டேன்.
- ❖ பள்ளி வளங்களான தண்ணீர், மின்சாரம் போன்ற எதையும் வீணாக்கமாட்டேன்.

## 5. Safety & Prohibited Items

**I understand that safety comes first.**

**I will:**

- ❖ Follow all safety rules in classrooms, laboratories, playgrounds, swimming pool and school transport.
- ❖ Report unsafe behaviour or hazards to teachers or any available staff immediately.

**I will not:**

- ❖ Bring or use sharp objects, firecrackers, any harmful substances or any illegal items.
- ❖ Carry objectionable or unsafe materials to school.

## 5. பாதுகாப்பு மற்றும் தடைசெய்யப்பட்ட பொருட்கள்

**பாதுகாப்பு முதன்மை என்பதை நான் புரிந்து கொள்கிறேன்.**

**இவற்றை நான் பின்பற்றுவேன் :**

- ❖ வகுப்பறைகள், ஆய்வகங்கள், விளையாட்டு மைதானம், நீச்சல்குளம் மற்றும் பள்ளிப் போக்குவரத்தில் அனைத்து பாதுகாப்பு விதிகளையும் பின்பற்றுவேன்.
- ❖ பாதுகாப்பற்ற நடவடிக்கைகள் அல்லது அபாயங்கள் ஏதேனும் அறிந்தால் உடனடியாக அருகிலுள்ள ஆசிரியர் அல்லது பணியாளர்களிடம் தெரிவிப்பேன்.

**இவற்றை நான் செய்யமாட்டேன் :**

- ❖ கூர்மையான பொருட்கள், பட்டாசுகள், தீங்கு விளைவிக்கும் பொருட்கள் அல்லது சட்ட விரோத பொருட்களைப் பள்ளிக்குக் கொண்டு வரமாட்டேன்.
- ❖ ஏற்றுக்கொள்ள முடியாத அல்லது பாதுகாப்பற்ற பொருட்களைப் பள்ளிக்கு எடுத்து வரமாட்டேன்.

## 6. Digital Conduct & Cyber Discipline

**I understand that online behaviour has real consequences.**

**I will:**

- Use digital platforms responsibly and respectfully.

**I will not:**

- I will not bring mobile phones or any electronic devices to the school.
- Engage in cyberbullying, online abuse or share offensive or inappropriate content.
- Post, forward or misuse school-related photos, videos or information without permission.

## 6. இணையதள நடவடிக்கை மற்றும் நான் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள்

**இணைய நடத்தை மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை நான் புரிந்து கொள்கிறேன்.**

**இவற்றை நான் பின்பற்றுவேன் :**

- டிஜிட்டல் தளங்களைப் பொறுப்புடன் மற்றும் கவனத்துடன் பயன்படுத்துவேன்.

**இவற்றை நான் செய்யமாட்டேன் :**

- கைப்பேசி அல்லது எந்த மின்னணு சாதனங்களையும் பள்ளிக்குக் கொண்டு வரமாட்டேன்.
- இணைய துன்புறுத்தல், ஆன்லைன் அவமதிப்பு அல்லது பொருத்தமற்ற அல்லது ஆபாசமான உள்ளடக்கங்களைப் பகிரமாட்டேன்.
- அனுமதியின்றி பள்ளித் தொடர்பான புகைப்படங்கள், வீடியோக்கள் (காணொலிகள்) மற்றும் எந்தவிதமான தவறான தகவல்களையும் பகிரமாட்டேன்.

## 7. Transport & Public Behaviour

**I will:**

- Follow all school transport rules and respect drivers, conductors and all staff.
- Prioritise junior students and assist them when needed.
- Follow the staff's instructions during transport without objection.
- Represent Kings School positively in public places, competitions, tours and online platforms.

**I will not:**

- Behave unsafely, shout, stand on seats or disturb others in school transport.
- Do anything that brings disrepute to my school.

## 7. போக்குவரத்து மற்றும் பொது நடத்தை

**இவற்றை நான் பின்பற்றுவேன் :**

- பள்ளிப் போக்குவரத்து விதிகளைப் பின்பற்றுவதோடு, ஓட்டுநர்கள், நடத்துநர்கள் மற்றும் பணியாளர்களை மரியாதையுடன் நடத்துவேன்.
- இளைய மாணவர்களுக்கு முன்னுரிமை கொடுத்துத் தேவையான உதவியை வழங்குவேன்.
- போக்குவரத்தில் பணியாளர்கள் வழங்கும் அறிவுறுத்தல்களை எதிர்ப்பின்றி பின்பற்றுவேன்.
- பொது இடங்கள், போட்டிகள், சுற்றுப்பயணங்கள் மற்றும் இணையதளங்களில், கிங்ஸ் பள்ளியின் நல்ல பெயரைக் காப்பேன்.

**இவற்றை நான் செய்யமாட்டேன் :**

- பள்ளி வாகனங்களில் பாதுகாப்பற்ற முறையில் நடந்து கொள்ளவோ, சத்தம் போடவோ, இருக்கைகளில் நிற்கவோ அல்லது மற்றவர்களைத் தொந்தரவு செய்யவோ மாட்டேன்.
- பள்ளியின் நற்பெயருக்குக் களங்கம், மற்றும் தீங்கு விளைவிக்கும் வகையில் எந்தச் செயலிலும் ஈடுபடமாட்டேன்.

## 8. Responsibility & Leadership

**I understand that my actions reflect my character.**

**I will:**

- ❖ Take responsibility for my actions and accept consequences when I make mistakes.
- ❖ Show leadership, teamwork and discipline in academics, extracurricular activities, competitions, sports, clubs, assemblies, Scouts & Guides, Cubs & Bulbuls, JRC and all other activities.

**I understand:**

- ❖ That student leaders, sports secretaries, captains, vice-captains and prefects are expected to follow higher standards of discipline.
- ❖ That repeated or severe violations may lead to strict disciplinary action.

## 8. பொறுப்பு மற்றும் தலைமைத்துவம்

**என் செயல்கள், என் பண்பைப் பிரதிபலிக்கின்றன என்பதை நான் புரிந்து கொள்கிறேன்.**

**இவற்றை நான் பின்பற்றுவேன் :**

- ❖ நான் ஏதேனும் தவறு செய்தால், என் செயல்களுக்குப் பொறுப்பேற்று, அதன் விளைவுகளை ஏற்றுக் கொள்வேன்.
- ❖ கல்வி, கல்விச்சார்ந்த செயல்கள், விளையாட்டு, கிளப்புகள், கூட்டங்கள், சாரண சாரணியர், இளம் சாரண சாரணியர் ( Cubs & Bulbuls ), செஞ்சிலுவை சங்கம் உள்ளிட்ட அனைத்து செயல்பாடுகள் மற்றும் குழுப்பணிகளிலும் தலைமைத்துவம் மற்றும் ஒழுக்கத்துடன் நடந்து கொள்வேன்.

**இவற்றை நான் புரிந்து கொள்கிறேன் :**

- ❖ மாணவர் தலைவர்கள், விளையாட்டுப் பொறுப்பாளர்கள், கேப்டன்கள், துணை கேப்டன்கள் மற்றும் வழிகாட்டும் மாணவர்களாகவோ வாய்ப்பு கிடைக்கும் வேளையில் உயர்ந்த ஒழுக்க நிலைகளைப் பின்பற்றுவேன்.
- ❖ தொடர்ச்சியான அல்லது கடுமையான விதிமீறல்கள் கடுமையான ஒழுங்கு நடவடிக்கைகளுக்கு வழிவகுக்கும் என்பதைப் புரிந்து கொண்டு நடப்பேன்.

## 9. No-Driving Policy for Students

**I will not :**

Drive or bring motorcycles, cars or any motor vehicle that requires a valid driving licence to school or to any school-related activity.

**I understand :**

That violation of this rule will invite strict disciplinary action and that the school will not be responsible for any legal or safety consequences arising from such acts.

## 9. மாணவர்கள் வாகனங்கள் ஓட்டத் தடைசெய்யப்பட்ட விதிமுறைகள்

**இவற்றை நான் பின்பற்றுவேன் :**

- ❖ இரு சக்கர வாகனங்கள், நான்கு சக்கர வாகனங்கள், முறையான ஓட்டுநர் உரிமம் தேவைப்படும் மோட்டார் வாகனம் போன்ற எந்தவொரு வாகனத்தையும் பள்ளி வளாகத்திற்கோ அல்லது பள்ளித் தொடர்பான எந்தவொரு நிகழ்வுகளுக்கோ கொண்டு வரவோ, ஓட்டவோ மாட்டேன்.

**இவற்றை நான் புரிந்து கொள்கிறேன் :**

- ❖ இந்த விதியை மீறினால் கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் புரிந்து கொள்கிறேன். மேலும் இத்தகைய செயல்களால் ஏற்படும் எந்தவிதமான சட்ட அல்லது பாதுகாப்பு விளைவுகளுக்கும் பள்ளிப் பொறுப்பல்ல என்பதையும் நான் புரிந்து கொள்கிறேன்.

# ZERO TOLERANCE PLEDGE

**I clearly understand that Kings School follows a ZERO TOLERANCE policy for the following behaviours. Violation of any of these will invite immediate and strict disciplinary action, irrespective of intent or excuse.**

**I will not, under any circumstances:**

- ❖ Bully, intimidate, threaten, harass or humiliate any student or staff member (physically, verbally, emotionally or socially).
- ❖ Participate in or support cyberbullying, online abuse, spreading rumours, trolling or sharing offensive or harmful digital content.
- ❖ Bring, use, possess or promote any illegal or banned items.
- ❖ Circulate, view, store or share objectionable, unsafe or inappropriate content in any form.

**I understand:**

- ❖ That ignorance, peer pressure or "just for fun" will not be accepted as an excuse.
- ❖ That these actions seriously endanger the safety, dignity and well-being of others.
- ❖ That such violations may lead to suspension, dismissal and/or legal action as applicable.

**I take this pledge seriously and accept full responsibility for my actions.**

## ZERO TOLERANCE PLEDGE ( சகிப்புத் தன்மைக்கு உட்படாதவை ) உறுதிமொழி

**கீழ்க்கண்ட செயல்களில் கிங்ஸ் பள்ளி, "சகிப்புத்தன்மைக்கு உட்படாதவை" என்ற கொள்கையைக் கடைப்பிடிக்கிறது என்பதை நான் தெளிவாகப் புரிந்து கொள்கிறேன்.**
**இவற்றில் ஏதேனும் மீறப்பட்டால், என்னால் கூறப்படும் காரணமோ அல்லது விளக்கமோ ஏற்றுக் கொள்ளப்படாது உடனடியாகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் புரிந்து கொண்டேன்.**

**இவற்றை நான் எந்த சூழ்நிலையிலும் செய்யமாட்டேன் :**

- ❖ மாணவர்கள் அல்லது பணியாளர்களை உடலளவிலோ, மனதளவிலோ சமூக அல்லது இணைய வழியாகவோ தொந்தரவு செய்தல், மிரட்டுதல், இகழ்தல், அவமதித்தல் போன்ற செயல்களைச் செய்யமாட்டேன்.
- ❖ இணையத் துன்புறுத்தல், வதந்தி பரப்புதல், தீங்கு விளைவிக்கும் டிஜிட்டல் உள்ளடக்கங்களைப் பகிர்தல் போன்ற செயல்களைச் செய்யமாட்டேன்.
- ❖ சட்டவிரோத அல்லது தடைசெய்யப்பட்ட பொருட்களைக் கொண்டு வருதல், பயன்படுத்துதல் அல்லது ஊக்குவித்தல் போன்ற செயல்களைச் செய்யமாட்டேன்.
- ❖ ஏற்றுக்கொள்ளப்படாத, பாதுகாப்பற்ற அல்லது ஆபாசமான உள்ளடக்கங்களைப் பார்த்தல், சேமித்தல் அல்லது பகிர்தல் போன்ற செயல்களைச் செய்யமாட்டேன்.

**இவற்றை நான் புரிந்து கொள்கிறேன் :**

- ❖ அறியாமை, நண்பர் அழுத்தம் அல்லது "வேடிக்கைக்காக" என்ற காரணங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்பதைப் புரிந்து கொண்டேன்.
- ❖ இச்செயல்கள் பிறரின் பாதுகாப்பு, மரியாதை மற்றும் நலனைக் கடுமையாகப் பாதிக்கும் என்பதைப் புரிந்து கொண்டேன்.
- ❖ இவ்விதமான செயல்கள் இடைநீக்கம், பள்ளிநீக்கம் மற்றும் அல்லது சட்ட நடவடிக்கைக்கு வழி வகுக்கும் என்பதைப் புரிந்து கொண்டேன்.

**இந்த உறுதிமொழியை நான் முழு பொறுப்புடன் ஏற்கிறேன்.**

## 10.Disciplinary Consequences

I understand that violation of this declaration may result in any of the following actions as per **SCHOOL DISCIPLINE POLICY** published in the handbook, depending on the gravity of the incident/crime/case:

- Verbal warning & Apology letter along with meeting parents.
- Issue of yellow/blue/redcard -Written warning along with meeting parents.
- Loss of privileges
- Suspension or dismissal

**I accept that the school's decisions in disciplinary matters will be final and made in the best interests of the student community.**

## Student Commitment

**I have read and fully understood this declaration. I agree to follow it sincerely in letter and spirit and strive to be a disciplined, responsible and proud student of Kings School.**

Student Name : ______________________________

Class : ______________________________

Student Signature : ______________________________

Date : ______________________________

## Parent / Guardian Acknowledgement

**I have read and understood the Kings School Student Declaration. I agree to support the school in guiding my child to adhere to this code of conduct religiously.**

Parent/Guardian Name : ______________________________

Signature : ______________________________

Date : ______________________________

**At Kings School, Discipline builds Character—and Character builds the Future.**

## 10. ஒழுக்க நடவடிக்கைகள்

**இந்த அறிவிப்பை மீறினால், பள்ளி கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்கு நடவடிக்கைகளின் படி, குற்றத்தின் தீவிரத்தைப் பொறுத்து கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்படலாம்.**

- வாய்மொழி எச்சரிக்கை & மன்னிப்புக் கடிதம் (பெற்றோருடன் சந்திப்பு)
- மஞ்சள் / நீலம் / சிவப்பு அட்டை – எழுத்துப்பூர்வ எச்சரிக்கை (பெற்றோர் சந்திப்பு)
- கல்விச் சலுகைகள் இழப்பு
- இடைநீக்கம் அல்லது பள்ளி நீக்கம்

**ஒழுக்க விவகாரங்களில் பள்ளியின் முடிவு இறுதியானது என்றும், அது மாணவர் சமுதாயத்தின் நலனுக்காக எடுக்கப்படும் என்றும் நான் ஏற்கிறேன்.**

**மாணவர் உறுதிப்பாடு :**

**இந்த அறிவிப்பை நான் முழுமையாக வாசித்து புரிந்து கொண்டேன். இதனை எழுத்திலும் செயலிலும் உண்மையுடன் பின்பற்றி, கிங்ஸ் பள்ளியின் ஒழுக்கமான, பொறுப்பான மற்றும் பெருமைமிக்க மாணவராக இருக்க உறுதி அளிக்கிறேன்.**

மாணவர் பெயர் : ______________________________

வகுப்பு : ______________________________

மாணவரின் கையெழுத்து : ______________________________

தேதி : ______________________________

---

**பெற்றோர் / பாதுகாவலர் உறுதிப்பாடு :**

**கிங்ஸ் பள்ளி மாணவர் உறுதிமொழியினை நான் வாசித்துப் புரிந்து கொண்டேன். என் குழந்தை இந்த ஒழுக்கக் கட்டுப்பாட்டை முறையாகப் பின்பற்ற பள்ளியுடன் முழுமையாக ஒத்துழைப்பேன்.**

பெற்றோர் / பாதுகாவலர் பெயர் : ______________________________

கையெழுத்து : ______________________________

தேதி : ______________________________

**கிங்ஸ் பள்ளியில், ஒழுக்கம் பண்பை உருவாக்குகிறது - பண்பு எதிர்காலத்தைக் கட்டமைக்கிறது.**